இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உங்கள் இடையை வரிந்து கட்டிக் கொள்ளுங்கள். விளக்குகளும் எரிந்து கொண்டிருக்கட்டும். திருமண விருந்துக்குப் போயிருந்த தம் தலைவர் திரும்பி வந்து தட்டும்போது உடனே அவருக்குக் கதவைத் திறக்கக் காத்திருக்கும் பணியாளருக்கு ஒப்பாய் இருங்கள். தலைவர் வந்து பார்க்கும்போது விழித்திருக்கும் பணியாளர்கள் பேறுபெற்றவர்கள். அவர் தம் இடையை வரிந்து கட்டிக் கொண்டு அவர்களைப் பந்தியில் அமரச் செய்து, அவர்களிடம் வந்து பணிவிடை செய்வார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். (லூக்கா 12:35-37)

# வறுமையின் பிடியில் வாழும் மக்களில் 15 % மக்கள் பழங்குடிகளாக உள்ளனர்!

## திருத்தந்தை வருத்தம்



## ஆகஸ்டு 9 - உலக பழங்குடி மக்கள் தினம்



கனடா நாட்டு பூர்வீக இனக்குழு மக்கள்

காடு, மலைகள் சூழ்ந்த இந்த பூமியை தனது வீடாகவும் காட்டைப் பதப்படுத்தி விவசாய பூமியாகவும் மாற்றினான் மனிதன். காலப்போக்கில் காடு, மலையை விட்டு விலகி வந்து தனக்கான வாழும் பகுதியை உருவாக்கிக் கொண்ட மனிதன் அதனை நகரம் என்றழைத்தான். அங்கு வாழ்பவன் அறிவு உடையவன், படித்தவன், நாகரிகம் தெரிந்தவன் என்றும், நகரத்திற்கு வராது காட்டில் மட்டுமே வாழ்பவன் பழங்குடி, ஆதிவாசி என்றும் அடையாளப் படுத்தப்பட்டான்.

1982-ம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபை ஆகஸ்ட் 9-ம் தேதியை பழங்குடிகள் இன நாளாக கடைபிடித்து வருகின்றது. பழங்குடிகள், அவர்களின் உரிமைகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே இந்த நாள் உலக பூர்வீக இனக்குழுக்கள் நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. மொழிகள் என்பது கருத்துப் பரிமாற்றக் கருவியாகவும், அன்றாட மனித வாழ்வில் முக்கிய அங்கமாகவும், அந்த மொழி பேசும் மனிதர்களின் கலாச்சாரத்தை பாதுகாக்கவும் உதவுகிறது. மொழிகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் இருப்பினும் பல்வேறு காரணங்களால் அவை வேகமாக அழிந்து வருகின்றன. இதில் பழங்குடியின மக்களின் மொழிகளே வேகமாக அழிகின்றன. பெரும்பாலும் பழங்குடியின மக்கள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் இல்லாதிருப்பதால் அம்மொழிகள் அழியும் நிலையிலுள்ளன. உலகில் 37 கோடி பூர்வீக குடியின மக்கள் 90 நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இது உலக மக்கள் தொகையில் 5%-க்கும் குறைவு எனினும் வறுமையின் பிடியில் வாழும் மக்களில் 15% மக்கள் பழங்குடிகளாக உள்ளனர். இவர்கள் சுமார் 5 ஆயிரத்திற்கு அதிகமான கலாச்சாரங்களையும் 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட மொழிகளையும் பேசுகின்றனர்.

### அழிவிற்கு மேல் அழிவ

நகரத்தில் வாழ்ந்த மனிதர்கள் அப்படியே வாழாமல் மீண்டும் காடுகளை நோக்கிச் செல்ல தொடங்கி காட்டை பணம் ஈட்டும் இடமாகப் பார்த்து இயற்கையின் விலைமதிப்பில்லா கொடைகள் பலவற்றுக்கு விலையை நிர்ணயித்துக் கொண்டார்கள். பசுமை போர்த்திய இடங்களும், அங்கு வாழும் விலங்குகளும் அவர்களின் கண்களுக்கு வியாபாரப் பொருட்களாகத் தெரியத் தொடங்கின. மனிதர்கள் சுவாசித்து ஆரோக்கியமாக வாழ நுரையீரல் எவ்வளவு முக்கியமோ அதுபோல காடுகள் உலகின் சுவாசத்திற்கு உதவும் நுரையீரல்கள். இதனை முற்றிலும் மறந்து மேலும் மேலும் சுரண்டிக் கொண்டு இருப்பது மிகவும் வேதனை அளிக்கும் செயல்.

### பழங்குடி இன மக்களின் வாழ்வியல்

பழங்குடி இன மக்கள் இயற்கையோடு இயைந்த மிகச் சிறந்த வாழ்க்கைமுறையைக் கொண்டு ஆரோக்கியமாகத் திகழ்பவர்கள். அகம்பாவம் இல்லாதவர்கள், சடங்கு, சம்பிரதாயம் என்ற பெயரில் தங்களை முடக்கி கொள்ளாதவர்கள். தனக்கான போலி மதிப்பீடுகளை உருவாக்கத் தெரியாத இத்தகைய பழங்குடி சமூகத்தைப் பார்த்துத் தான் சிலர் காட்டுமிராண்டி என்று சொல்கின்றனர். மாடு வளர்ப்பு ஆடு, வளர்ப்பு சோளம், ராகி, கம்பு பயிரிடுதல் போன்றவற்றை தங்களின் தொழிலாக கொண்டு வாழ்கின்றனர். தங்களின் உணவுத் தேவைக்குப் போக மீதியைக் கால்நடைகளுக்கு போட்டு அதனையும் வளர்த்து வருகின்றார்கள். திருட்டு என்பதே இல்லை திருட்டு, கையூட்டு, அதீக பொருளீட்டுதல் இல்லாத இனம் இவர்கள் இனமேயாகும். விலங்குகள், பறவைகளுக்கு வாழ்க்கை எப்படி உள்ளதோ அதே போன்றே பழங்குடிகளும் சுதந்திரமான ஒரு வாழ்வை அமைத்துக் கொள்கிறார்கள்.

### எளிமையான வாழ்க்கை முறை.

உணவுப் பொருட்களை விட இன்று மிகப் பெரிய விற்பனை பொருள் மருந்துகளும் மருத்துவமும் ஆகும். நகர மனிதர்கள் 50 வயதிற்குப் பின்பு மருத்துவமனைக்குச் செல்வதே முக்கிய வேலையாக கொண்டிருக்கும் வேளையில் பழங்குடிகளின் மருத்துவம் மிக எளிமையானது. 90% அவர்களே காட்டில் இருக்கும் மூலிகைகளைக் கொண்டு மருத்துவம் பார்த்துக் கொள்கிறார்கள். எலும்பு முறிவு ஏற்பட்டால் மட்டுமே பெரும்பாலும் மருத்துவர்களைத் தேடி சமவெளிக்கு வருகிறார்கள்.

பூர்வீககுடியின மக்கள் வாழ்விடத்தில் தான் உலகின் 80% உயிர்சூழல் பன்மயம் கொண்டதாக உள்ளது. எனவே சூழலியலை பாதுகாக்க பூர்வகுடிகளை பாதுகாப்பது நம் எல்லோரின் கடைமையாகும். ஏனெனில் பழங்குடியினர் சூழலுக்கு ஏற்ப தங்களை பாரம்பரிய முறையில் தங்களை தகவமைத்துக் கொள்கின்றனர். இன்று பழங்குடிகளுக்கான சிக்கல்கள் அது நம் எல்லோருக்குமான சிக்கல்கள், இயற்கை வளங்களுக்கான சிக்கல் என புரிதல் வேண்டும். பூர்வீக குடிகள் இன்று பல்வேறு சவால்களை சந்தித்து கொண்டு சொல்லொண்ணாத் துயரத்தில் உள்ளனர். இந்த பெருந்தோற்று காலம் எல்லோருக்கும் பெரும் சவாலாக உள்ளது. குறிப்பாக சரியான மருத்துவ வசதிகள், அத்தியாவசிய சேவைகள், சுகாதாரம், சுத்தமான குடிநீர், சோப்பு, நோய்தொற்று நீக்கிகள் போன்றவை அனைவருக்கும் எட்டாக கனியாக உள்ளது.

### உணவில் வந்த மாற்றங்கள்

ஆனாலும் பழங்குடிகளின் சிறப்பான பாரம்பரிய வாழ்க்கைமுறைதான் அவர்கள் நோயை எதிர்க்கும் திறன் பெற்றிருப்பதற்கான அடையாளம். இப்பொழுது அதற்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது அவர்கள், உணவுப் பாதுகாப்பு மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்கள் பின்பற்றி வந்த உணவு கலாச்சாரமே அவர்களை இது நாள் வரை ஆரோக்கியமாக வைத்திருந்தது. அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் தனித்துவமான கலாச்சாரங்களையும் வாழ்க்கை முறையையும் பராமரிக்கச் சிறப்பு நடவடிக்கைகள் தேவை.

பூர்வீக இனக்குழுக்களின் வளர்சசிக்காக திருஅவையும் பல்வேறு முயற்சிகளையும் செயல் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

பூர்வீக இனக்குழுக்கள் தங்களது வாழ்வாலும் இயற்கையோடு இணைந்த செயல்பாடுகளால் நமக்கு பல செய்திகளை கொடுக்கின்றனர். இவர்களின் மாண்பையும் மனிதத்தையும் மதித்து இப்பூமியில் இவர்கள் இனம் நிலைத்து வாழ உடன்பிறந்த உணர்வுடன் ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ்வோம்.

# மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களின் கூட்டு ஒருங்கியக்க பயணத்திற்கான ஆய்வு அறிக்கை (பகுதி 2)

## (பினாங்கு மறைமாவட்டம் )

**பினாங்கு:** பினாங்கில் உள்ள அமல உற்பவி அன்னை பங்கில், 2022, ஜூலை 11 அன்று மலேசிய தேசிய ஆயர் பேரவை நடைபெற்றது. மலேசியாவின் ஒன்பது மாமறை/ மறைமாவட்டங்களின் பிரதிநிதிகள் நேரிலும் இயங்கலை வாயிலாகவும் இந்த ஒரு நாள் பேரவை மாநாட்டில் கலந்து கொண்டனர். சிங்கப்பூர் மற்றும் புருணையிலிருந்தும், பிற சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்று முடிந்த ஒன்பது மாமறை/மறைமாவட்டங்களின் ஆயர்கள் கூட்டு ஒருங்கியக்க பேரவையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையை / பரிந்துரைகளைப் பிரதிபலிக்கும் சுருக்க அறிக்கைகளை இறைதூதன் மறைமாவட்ட ரீதியாக முன்வைக்கிறது.

இதன் அடிப்படையில் கடந்த இரு வாரங்களாக கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மற்றும் மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. இந்த வாரம் பினாங்கு மறைமாவட்டதின் ஆய்வு அறிக்கையை உங்கள் முன் வைக்கிறோம்.

ஆயர் ஒருங்கியக்க மாமன்றத்தின் முந்திய இந்த கூட்டம் ஒன்று கூடுவதற்கும் இறைமக்களின் கருத்துக்களை ஆய்வு செய்து ஒருங்கிணைப்பதற்கும் ஒரு வாய்ப்பாக இருந்தது. அந்தந்த பணிக்குழுக்களில் உள்ள மகிழ்ச்சிகள் மற்றும் போராட்டங்கள், சவால்கள் பற்றிப் பேசவும் இது ஒரு சிறந்த தளமாக அமைந்தது எனலாம்.

### சவால்கள்

- இறைமக்கள் மத்தியில் ஆயர் கூட்டு ஒருங்கியக்க மாமன்றத்தின் கேள்விகள் மற்றும் செயல்முறைகள் பற்றி போதிய புரிதல் இல்லாமை.
- கோவிட்-19 தொற்றின் கட்டுப்பாடுகள் காரணமாக தொடர்பு கொள்வதில் சிரமம் ஏற்பட்டது.
- நேரக் கட்டுப்பாடு -நேரப்பற்றாக்குறை.
- சுற்றுப்புறங்களில் உள்ளவர்களை முழுமையாகச் சந்திக்க இயலாமை.
- இறைமக்கள் மத்தியில் நிலவும் சமூக கலாச்சார மற்றும் மொழி வேறுபாடுகள்.

### அறிந்துணரப்பட்டவை

- ஆயர் ஒருங்கியக்க மாமன்றத்தின் செயல்முறை உணரப்பட்டது.
- உறவை கட்டியெழுப்புதலின் அவசியம்.
- நாம் சாதாரணமாக நாள்தோறும் செயல்படுத்தும் செயலாக்கங்களைச் சிறிது நிறுத்தி, மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு தேவை.
- வாழ்க்கை அனுபவங்கள் பகிரப்பட்டன. பெரும்பாலான வர்கள் எதிர்மறையான பகிர்வுகளில் கவனம் செலுத்து கின்றனர்.
- அருள்பணியாளர்கள் மற்றும் தலைவர்களின் அணுகுமுறை குறித்து நிறைய கருத்துரைக்கப்பட்டன.
- "செவிமடுத்தல் மற்றும் இரக்கம் " இருக்க வேண்டியதன் அவசியத்தை பெரும்பாலானோர் சுட்டிக்காட்டினர்.

### சுருக்கம்

- உறவுகளில் கவனம் செலுத்துதல் (சேர்ந்து பயணித்தல்)
- குறிப்பாக தலைவர்கள் மத்தியில், செவிமடுக்கும் மற்றும் இரக்கத்தன்மை மேலோங்க வேண்டும். தைரியத்துடனும் அன்புடனும் (அச்சமின்றி) பேச வேண்டும்.
- இறைமக்களிடையே அதிக பிணைப்பு தேவை:

⇒இளைஞர்கள்
⇒வயதானவர்கள்
⇒விளிம்புநிலைநில் உள்ளவர்கள் மற்றும் சிறுபான்மையினர்
⇒ஏழைகள்

- அனைவரது கலாச்சாரங்களை மதித்தல் வேண்டும்.
- நற்செய்தி பரப்புதலை நமது வாழ்க்கை முறையாக்க வேண்டும். (திருஅவையின் எல்லைகளுக்கு அப்பால் செல்லுதல்).



சினோடல் செயல்முறை வெவ்வேறு நிலைகளில் உள்ள இறைமக்களை ஒன்றிணைக்க உதவியதோடு, ஒன்றாக பயணிக்க அவர்களின் மனதையும் இதயத்தையும் இணைத்தது.

*அருள்தந்தை ஜூட் மிராண்டா, பினாங்கு மறைமாவட்டம்.*

# ஜொகூர், பாமோல் தோட்டத்தில் புனித அன்னம்மாள் திருவிழா கொண்டாடப்பட்டது

கோவிட் தொற்று நோய் காரணமாக கடந்த மூன்று ஆண்டு காலமாக ஒன்றுகூடுதலோ, திருப்பலி கொண்டாடுவதோ எதுவும் இல்லாத குறையைக் கடந்து இவ்வாண்டு இங்கு அமைந்துள்ள பாமோல் தோட்ட அன்னம்மாள் சிற்றாலய திருவிழா கொண்டாட்டத்தில் இறைமக்கள் நிறைந்து காணப் பட்டனர்.

கடந்த 29 ஜூலை, 2022, வெள்ளிக்கிழமையன்று, மாலை 6.30 மணிக்கு இச்சிற்றாலயத்தின் வருடாந்திர திருவிழா மிகவும் சிறப்பாகத் தயார் செய்து கொண்டாடப்பட்டது. முதல் நாள் கொடியேற்ற சடங்குடன், ஏழு நாள்கள் நவநாள் இறைவேண்டலுடன் மையக்கருத்தை யொட்டிய சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

விழா திருப்பலிக்குத் தலைமையேற்ற அருள்தந்தை சிரில் மண்ணாயகம் அவர்கள், மறையுரையில் புனித அன்னமாள், அன்னை மரியாள் மற்றும் இயேசு கிறிஸ்து குறித்து விளக்கி அவர்கள் எவ்வாறு நமது அன்றாட



*திருப்பலியில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினர்*

வாழ்வில் இணைந்திருக்கிறார்கள் என்பதை நன்கு விவரித்தார்.

மேலும், “இங்கு ஒன்று கூடியிருக்கும் மக்கள் ஏதோ ஒரு தேவைக்காக புனித அன்னம் மாளை நாடி வந்திருக்கிறார்கள். நிச்சயம் நம் தேவைகள் நிறைவேறும். தட்டினால் திறக்கக்கப்படும். கேட்டால் கொடுக்கப்படும் என்பதற்கு ஏற்ப முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும் வேண்டிட வேண்டும்” என அருள்தந்தை அறிவுறுத்தினார். திருப்பலியின் இறுதியில் நற்கருணை ஆசீர்வாதம் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவாக, வந்திருந்தோர் அனைவருக்கும் விழா ஏற்பாட்டுக்குழுவினரின் முயற்சியில் உணவு வழங்கப்பட்டது.

*-ஆவி. டேவிட், குளுவாங்*

# சிறுமந்தையாகிய நாம் அவரது ஆட்சிக்கு உட்பட்டவர்கள்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 19-ம் ஞாயிறு. நம்பிக்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாக இருப்பவர் ஆபிரகாம் என இரண்டாம் வாசகம் (எபி.11:1-19) குறிப்பிடுகிறது. அவரது நம்பிக்கையால் இறை மக்களாக அழைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவில் அதே உரிமையை பகிர்ந்து கொள்கிறோம்.

அதே நம்பிக்கையில்தான் இயேசு கிறிஸ்துவில், கடவுள் வாக்களித்த இறுதித் தீர்ப்புக்கு நாம் இப்போது காத்திருக் கிறோம். நமது இடையை வரிந்து கட்டிக்கொண்டு காத்திருக்கும்படி (லூக்.12:35) இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகிறார். இஸ்ரயேல் மக்கள் இடையில் கச்சை கட்டி, கால்களில் காலணி அணிந்து, கையில் கோல் பிடித்து விரைவாக பாஸ்கா உண்வை உட்கொண்டு, (விப.12:11) ஆண்டவரின் மீட்புத் திட்டத்தை நிறை வேற்ற விழிப்பாய் இருந்தார்கள். அதுபோல, நாமும் இக்காலத்தில் விழிப்பாய் இருக்க வேண்டும். ஏனெனில் நாம் நினையாத நேரத்தில், அவர் நம் கதவைத் தட்டுவார் (திவெ.3:20). ஆயினும், தமக்கென கொடுக்கப்பட்ட பணியைச் செய்து கொண்டிருப்பவர்களே, உரிமைச் சொத்தில் பங்காளிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவர் என பேதுருவின் கேள்விக்கு இயேசு பதிலளிக்கிறார். தலைவர் வரும்போது அவரவர் பணியைச் செய்து கொண்டிப்போர் உடைமையாள ராக உயர்த்தப்படுவார்(லூக்.12:43-44).

தனிநபர், குடும்பம், சமூகம், சமுதாயம் ஆகிய நிலைகளில் சாக்குப்போக்கு கூறாமல் நமது பணியை நேர்மையுடன் செய்வோம். அதற்குரிய வெகுமானம் கிடைப்பது உறுதி. இறுதித் தீர்ப்பின் போது நம்பிக்கை கொண்ட நன்மனதோர்க்குக் கிடைக்கும் வெகுமதியையும், எதிர்மறைப் போக்குடை யோர்க்குக் கிடைக்கும் வெகுமதியையும் நாம் அறிவோம். “ஆனால் அவர் விருப்பத்தை அறியாமல் அடிவாங்க வேண்டிய முறையில் செயல்படுவன், அவரது விருப்பத்தை அறியாமல் செயல்படுவதால் சிறிதே அடிபடுவான்”(லூக் 12:48) என இயேசு கூறுகிறார். “பாவம் செய்வோர் சாவுக்குரிய பாவம் செய்யவில்லை என்று கண்டால், அவர்களுக்காகக் கடவுளிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். கடவுளும் அவர்களுக்கும் அருள்வார்”(1யோவா5:16). பாவம் செய்வது மனிதப் பலவீனம் என்பதால் தூய்மை பெறும் நிலையில (உத்தரிக்கும் ஸ்தலம்) செல்வோர்க்கும் அருள் வாழ்வுக் கிட்டும் என்ற நம்பிக் கையைத் தருகிறார் ஆண்டவர்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், இயேசு, “சிறுமந்தையாகிய நீங்கள் அஞ்சவேண்டாம்” என்று கூறுகின்றார். யார் இயேசு சொல்கின்ற சிறுமந்தையில் அடங்குவார்கள் என்ற கேள்வி எழலாம். அவருடைய குரலுக்குச் செவிமடுக்கின்ற அவருடைய உண்மையான சீடர்கள் அல்லது ஆடுகள்... (யோவா 10: 27), அனைத்திற்கும் மேலாக அவருடைய ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுகின்றவர்கள் (மத் 6: 33) ஆவர். ஆண்டவரின் அவ்வார்த்தை களில் நம்பிக்கைகொண்டு, எதற்கும் அஞ்சாமல் துணிவோடு இருப்போம். இன்றைக்குப் பலர் ‘நான் சிறியவனா யிற்றே... வறியவனாயிற்றே... எளியவனா யிற்றே... என்னால் எப்படி இதையெல்லாம் செய்யமுடியும்... எப்படி இதையெல்லாம் சாதிக்க முடியும்’ என்று அஞ்சி நடுங்கு வதைப் பார்க்க முடிகின்றது. நம்பிக்கையே நமது பலமும் ஆற்றலுமாகிறது.

*-அந்தோணி இன்னாசி. ஸ்ரீ கெம்பாஙான், சிலாங்கூர்*

**ஆண்டின் பொதுக்காலம் 19-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | சா. ஞானம் 18: 6-9 |
| தி. பாடல்: | 33: 1,12. 18-19. 20,22 |
| 2ம் வாசகம்: | எபி 11: 1-2, 8-12 |
| நற்செய்தி: | லூக்கா 12: 32 - 48 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**